திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்கள் கூப்பிட்டால்தான் பேசுவதாக இருந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் கூப்பிட்டால்தான் நான் பேசுவதாக இருந்தேன். இல்லாவிட்டால் பேசுவதாக இல்லை. இந்த நோயே ரொம்ப மர்மமாக இருக்கிறது. வறுமை, பஞ்சம், பசி, பிணி இவற்றை ஒழிக்கவில்லை யென்றாலும் கூட, கொசு, மூட்டைப் பூச்சி இவைகளுக்கு எதிரான யுத்தத்தை நடத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா ? மர்மமாக இறப்பதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, மர்மமாக இறப்பது என்பது எதுவும் இல்லை. பொதுவாக, நோய் ஏற்பட்ட உடனே, மருத்துவ மனைக்குக் கொண்டு வந்து காட்டி விடுவார்களானால், அந்த உயிர்களைக் காப்பது என்பது எளிதான காரியமாகும். ஆனால், கை மருந்து வைத்து வைத்தியங்களைச் செய்ததற்குப் பின்னாலே, நோய் அதிகமாகப் பரவிய பிறகுதான் பொதுவாக மருத்துவ மனைக்குக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அப்படி கொண்டு வருகிற நேரத்திலேயே நோய் முற்றிய தன்மை அடைந்து விடுவதாலே, எவ்வளவு நல்ல சிகிச்சை அளித்தும் அது பயன்பெறாமல் அவர்கள் இறக்கிற நிலையைப் பெறுகிறார்கள். ஆகவே, நோயைத் தடுப்பதற்கும் கொசுவை ஒழிக்கவும் மருத்துவ மனைகளிலே தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒ) தஞ்சை மாவட்டத்தில் பதனீர் அருந்தியவர்கள் உடல் நிலை பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து.

திரு. அ. செல்லப்பா : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" தஞ்சை மாவட்டம், பாபநாசம் அருகிலுள்ள இடையிருப்பு, மணப்படுக்கை ஆகிய [redacted]ர்களில் பதனீர் அருந்தியதால் ஆண், பெண், சிறுவர்கள் 32 பேர்களுக்கு மயக்கம், வாந்தி உண்டாகியதால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து. "

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

[1979 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய காப்பிகள் தேவைப்படுவதால் வைக்கப்பெறவில்லை. இனிமேல், வேண்டு மானால் வைக்க ஏற்பாடு செய்யலாம். எனவே, தற்போது நீங்கள் அறிக்கையைப் படித்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் வர்களே, தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், அம்மாப்பேட் டைக்கு அருகிலுள்ள இடையிருப்பு, மணப்படுகை கிராமங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் (ஆண், பெண், சிறுவர்கள் உட்பட) சிலர் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 ஆம் நாள் அன்று காலை 6 மணியிலிருந்து 8 மணிக்குள் சில பதனீர் விற்பவர் களிடமிருந்து பதனீர் வாங்கி அருந்தி விட்டு அறுவடை வேலைக்கு சென்றார்கள். வேலைக்குச் செல்லாத சிலரும் இந்தப் பதனீரை அருந்தினார்கள். இந்தப் பதனீரை அருந்திய அவர்கள் (ஆண், பெண், குழந்தைகள்) அனைவருக்கும் காலை 11 மணி யிலிருந்து நடுப்பகல் 2½ மணிவரையில் வயிற்று வலியும், வாந்தி யும், பேதியும் ஏற்பட்டது. இந்த ஆபத்தான நிலைமையை உணர்ந்த பொதுமக்கள் பாதிக்கப்பட்டவர்களை டிராக்டர் மூல மாக பாபநாசம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல ஏற் பாடு செய்தனர். மெலட்டூர் ஆரம்ப சுகாதார மருத்துவ அதி காரி, காவல் துறை உதவியுடன் மருத்துவ மனைக்குப் பாதிக்கப் பட்ட சிலரை முதலுதவி கொடுத்து அனுப்பி வைத்தார். இது பற்றி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து தகவலறிந்த மாவட்ட சுகாதார அதிகாரி ஒரு குழுவினருடன் அக்கிராமங்களுக்குச் சென்றார்.

2. பாபநாசம் அரசு மருத்துவ மனையிலுள்ள பெண் மருத் துவ அதிகாரி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை அளித் தார். பாதிக்கப்பட்டோர்களில் 39 பேர்கள் உள்நோயாளிகளாக வும், 29 பேர் புற நோயாளிகளாகவும் சிகிச்சைப் பெற்றனர். பாபநாசம் மருத்துவமனையில் போதுமான இடவசதி இல்லாத தால் அவர்களனைவரும் அன்றிரவு 8 மணிக்கு காவல் துறை மற்றும் சுகாதாரத்துறையைச் சேர்ந்த ஊர்திகளில் தஞ்சையி லுள்ள இராஜா மிராசுதார் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக் காக அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களின் சிகிச்சையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் நிலை நன்றாகத் தேறி வருவதாகவும் அவர்கள் விரைவில் மருத்துவ மனையிலிருந்து அவரவர்கள் இல்லங்களுக்கு அனுப்பப்படுவார் களென மாவட்ட சுகாதார அதிகாரி கூறியுள்ளார். பாதிக்கப் பட்டவர்களில் எவரும் இறக்கவில்லை.

(3) பாதிக்கப்பட்டவர்கள் அருந்திய பதனீரின் தரம் ஐயப் பாட்டிற்குறியதால் காவல் துறையினர் பதனீர் விற்ற பானை களை பறி முதல் செய்து ஒரு வழக்கு பதிவு செய்து புலன் விசா ரணை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும், பாதிக்கப்பட் டவர்களில் ஒருவரின் வாந்தியை பரிசோதனைக்காக அனுப்பி

இருக்கிறார்கள். இது தவிர பொது சுகாதார துறையைச் சேர்ந்த ஊழியர்கள் பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட கிராமங்களையும் தீவிரமாகக் கண்காணித்து வருகிறார்கள்.

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவரவர்களே, பதநீர் அருந்தியதால் பாதிக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் கேட்கவிரும்புவது, பதநீர் என்று கருதி அந்த 32 பேரும் அருந்தி இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மது அருந்தி இருக்கிறார்கள் என்று விவர்கள் மீதே வழக்கு போட்டிருக்கிறார்கள். இந்த அரசுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் மீது வழக்கு போடுவதுதான் கொள்கையா ? பாதிக்கப்பட்டவர்கள்மீது வழக்கு போடுவதைக் கைவிடுவதுடன் இந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப் போல் தகவல் என்னிடத்திலே இல்லை. பதநீர் விற்றதாகவும், பதநீர் குடித்ததாகவும் மருத்துவர்களும் காவல் துறையினரும் அறிக்கை அனுப்பி இருக்கிறார்கள். அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் இருக்குமானால் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

[பிற்பகல் 12—40].

(ஓ) சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் பற்றி திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ் எஸ். ஜே. சாதிக் பாட்சா, நல்லதம்பி ஆகியோர் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் ; திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் பற்றி எழுந்துள்ள பதட்ட நிலையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தர ராஜன் : தலைவர் அவர்களே மருத்துவக் கல்லூரி இயக்குநரிடமிருந்து வந்துள்ள அறிக்கையின்படி சென்னை நகரிலுள்ள அரசு மருத்துவமனை